# நீங்கள் பிறருக்காக ஜீவித்தால் வாழ்க்கையின் பாரம் இலகுவாக்கப்படும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

16. “**ஆனால் இத்தனை ஆண்டுகளும், சுமார் முப்பத்தொன்று வருட ஊழிய காலம் முழுவதிலும் நான் அவர் வரக்கூடிய அவ்வேளைக்காக எனது இருதயத்தை ஆயத்தமாக்கி வைத்துள்ளேன். எனவே அவர் எப்பொழுது வருவார் என்பதைப் பற்றி பிரச்சினையில்லை**” **என்று கூறினேன்.**

அவர், “அது உண்மைதான்” என்று பதிலளித்தார். “**எனக்கு இருக்கும் மிகப்பெரிய புளகாங்கித உணர்வு எதுவென்றால், இத்தனை காலமும் மற்றவர்களுக்காக நான் ஜீவித்துக் கொண்டிருப்பதுதான்**” **என்று நான் கூறினேன்.**

17. “அதுதான் சரியான வாழ்க்கையாயிருக்கிறது, அதுவே வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குகிறது. வாழ்க்கையானது நீங்கள் உங்களுக்கென்று என்ன செய்துகொள்ள முடிந்தது அல்லது நிறைவேற்றிக் கொண்டதோ அல்ல, மற்றவர்களுக்காக நீங்கள் என்ன செய்ய இயலக்கூடியதாக உள்ளது என்பதுதான்” என்றார் அவர்.

18. ஆகவே, அப்படி வாழ்வதுதான், நீங்கள் உண்மையாக வாழ்கிறீர்கள் என்று இருக்கிறது.

**நம்மில் யாராவது ஒருபோதும் அவ்விதம் பிறருக்காக வாழ்ந்திராமல் இருப்பது நேரிட்டிருந்தால், பிறருக்காக வாழ முயற்சி செய்யுங்கள். அதற்கு ஒரு முயற்சி செய்யுங்கள்;** அப்படி செய்யும் பொழுது, நீங்கள் வாழும் வாழ்க்கையிலிருந்து, உங்களுக்கு என்ன பெற்றுக்கொள்ளலாம் என்பதற்காக, நீங்கள் உங்களுக்காக வாழாமல் யாருக்காவது உங்கள் வாழ்க்கையின் மூலம் பயன்தரத்தக்க அளவுக்கு ஜீவியுங்கள், **அதன்மூலம் வாழ்க்கையானது எவ்வளவு இன்னும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது என்பதை நீங்கள் காணுங்கள். பிறருக்காக வாழ்வதன் மூலம் ஐசுவரியங்களைவிட அல்லது நீங்கள் சிந்திக்கும் எந்தவொன்றையும் விட மேலாக நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவதை காண்பீர்கள்.** வாழ்க்கையானது பாரம் மிகுந்ததாயிருக்கிறது.... **எனவே நீங்கள் பிறருக்காக ஜீவித்தால் வாழ்க்கையின் பாரம் இலகுவாக்கப்படும். நீங்கள் பிறருக்காக ஜீவிப்பதைச் செய்ய உங்களால் கூடும்.**

**பிறருக்காக நீங்கள் ஏதாவது பயனுள்ள காரியத்தைச் செய்தாலொழிய, அதினால் கிடைக்கும் சந்தோஷத்தை நீங்கள் அறிய மாட்டீர்கள்.**

19. கர்த்தருக்கென்று நான் செய்துவரும் ஊழியத்தில் விரைவில் அது முப்பத்தொன்று ஆண்டுகளை எட்டப்போகிறது, அதைப்பற்றி நான் எண்ணிப் பார்க்கும்படி நேரிடுகிறது. எந்தவொரு மனிதனும் தனது பணியின் கடைசிக் கட்டத்தை எட்டவேண்டியிருக்கும் பொழுது, அவன் தனது இறுதியான மணி நேரத்தை வந்தெட்டுகையில், அவன் நடந்து வந்த பாதையை பின்னால் திரும்பிப் பார்த்து, வாழ்க்கையில் என்ன செய்து நிறைவேற்றியிருக்கிறோம் என்பதும், என்ன நேரிட்டது என்பதும் தனக்குள், "நீ ஏதாவது சாதித்தாயா?" என்ற கேள்வி எழும்பும் என்றும் நான் கருதுகிறேன். **நான் சற்று முன்பு கூறியவண்ணமாக, மற்றவர்களுக்காக நீங்கள் என்ன செய்தீர்களோ அதுவே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும்.**

20. எனது வாழ்க்கைப் பாதையின் முடிவை நான் போய் சேரும் பொழுது, அங்கே என்ன இருக்குமோ என்று நான் அடிக்கடி அறிய

விரும்பியதுண்டு. அவ்வேளை எப்பொழுது நேரிடும் என்பதை நாம் அறியோம்; நம்மில் எவரும் அறியோம். ஆகவே, வாழ்க்கையில் இதுவரை நான் நடந்து வந்திருக்கும் கடந்த கால பாதையை திரும்பிப் பார்த்து, அப்பாதையில் நான் வெவ்வேறு குன்றுகளையும், முட்புதர் நிறைந்த பாதைகளையும், பாறைகளையும், கஷ்டமான இடங்களையும், மிருதுவான பயணங்களையும் என் வாழ்வில் கடந்து வந்ததைப் பற்றியும், அவ்விதமான வேளைகளில் நான் என்ன செய்தேன் என்பதையும் பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தேன். அவையாவும் இந்நாட்களில் ஒன்றில் நான் கடந்து சென்று விடும் வேளையில் தெளிவாகத் தெரியவரும். நம் ஒவ்வொருவரிலும் அவ்வாறுதான் சம்பவிக்கும். ஒவ்வொருவருக்கும் அவ்வேளை வரும்பொழுது, அது தெளிவாகத் தெரியவரும் என்பதைப் பற்றி நாம் யாவரும் நிச்சயமுள்ளவர்களாய் இருப்போம்.

*செய்தி:* 61-06-11 ***வெளிப்படுத்தின விசேஷம் 5 அதிகாரம்*** #1

★★★★★